மெய்கண்டார் கழக வெளியீடு—௪௨

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

சித்தாந்தவுந்தியார்

ஆசிரியர்;
சென்னை, சூளை,
வைதிக சைவசித்தாந்த சண்டமாருதம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர நாயகரவர்கள்.

முன்னுரை, தலைப்புக்கள்;
கழக ஆசிரியர், சித்தாந்தசிகாமணி
திரு. க. வச்சிரவேல் முதலியார் B. A., L. T. அவர்கள்

காஞ்சிபுரம்
மெய்கண்டார் கழகம்
விரோதி தை-௧௨

79/2

முன்னுரை

(காஞ்சிபுரம் மெய்கண்டார் கழக ஆசிரியர்
சித்தாந்தசிகாமணி உயர்சைவத்திருவாளர்
க. வச்சிரவேல் முதலியார் B.A.L.T. அவர்கள்)

"சித்தாந்தவுந்தியார்" என்பது வைதிக சைவ சண்டமாருதம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர நாயகர் அவர்களால் இயற்றப்பட்டது; கடவுள், உயிர், தளை என்னும் முப்பொருளியல்புகளும், அவற்றுள் உயிர்க்கு உரிய பிறப்பு வீடுகளும் அவற்றின் காரணங்களும் ஆயவற்றின் முடிநிலை முடிபாகிய சித்தாந்த ஞானத்தைத் தெளிய உணர்த்துவது; நூற்றெட்டுக் கலித்தாழிசைகளாலாயது.

சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியில், மாயாவாத ஒருபொருட்கொள்கையினராலும், சிவதூடணமே பூடணமெனக்கொண்ட ஒரு சிலப் புதுவைணவராலும், மெய்யுணர்வின் வரம்பாய் நின்ற திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர் முதலிய அருட்டிருவாளர்களால் விளக்கப்பெற்றுப் பண்டைத் தமிழ் மெய்ந்நெறியும் ஆரியத்தின் பயனுமாய் அமைந்த ஈறில் பெருஞ் சிவநெறிக்கு, விளைந்த இடையூறுகள் பல; அவற்றைத் திருஞானசம்பந்தப் பெருமான் திருவடியே துணையெனப்பற்றி நின்று, பரபக்க கண்டனமும் சுபக்கத்தாபனமும் செய்யும் உரையும் பாட்டும் ஆய பல நூல்களை இயற்றி வெளியிட்டும்,விவாதங்கள்செய்தும்,விரிவுரைகள் செய்தும் களைந்தெறிந்து, தீதகற்றி நன்மையைப்பெருக்கிய பெருமை அருட்டிருவாளர் நாயகர் அவர்களுக்கு உரியது.

அத்தகு பெரியோர் இயற்றியருளிய இவ்வினிய நூலால் யாம் அறியலுறும் உண்மைகள்:—

(i) ஏனைச்சமய முடிபுகளெல்லாம் முதற்கண் உண்மையாகத் தோன்றி, ஆராய்ச்சி அனுபூதி என்னும் இத்திறம்பற்றி உணரலுறும் போது பொய்யாய் மறுக்கப்பட்டொழிதலின் பூருவபக்கம் (முன்னர்த்தோன்றும் கொள்கை) எனப்படும்; சைவ சமயமுடிபுகள் அங்ஙனம் மறுக்கப்படுதலின்றி முடிநிலை முடிபாய் நிலையுறுதல் பற்றிச் சித்தாந்தம் (பெறப்பட்ட முடிபு அல்லது முடிந்தமுடிபு) எனப்படும்—(உந்தி ௰௬.)

(ii) ஆரியமொழியினெழுந்த பழஞ் செய்யுட்களின் தொகுதி பூருவம் (முன்பாகம்), உத்தரம் (பின்பாகம்) என இரண்டு பாகமாக வைத்து ஆராயப்படும்; அவற்றுள் முன்னையது **வேதம்** எனவும், பின்னையது **வேதாந்தம்** எனவும் வழங்கும். 'யான்' 'யான்' என முனைத்துநிற்கும் ஆன்மாத் தனக்கு அந்தரியாமியாயுள்ள பரமான்மாவாகிய சிவத்தை வேறற நின்று உணர்ந்து, தன் முனைப்பறச்சிவமேயாய் நிற்றலே 'வேதாந்தம்' எனப்படும் உபநிடதங்களில் முடித்து உணர்த்தப்படும் மேலானபயன்; அது "சிவோகம்" பாவனையானெய்துவது; அதனை விடுத்து "அகமபிரமாஸ்மி" (நான் பிரமமாகின்றேன்) எனத் தன்னை முன்னர் எண்ணி முனைத்து நிற்றல் அகங்காரமாகிய பசுஞானமேயாம். (உந்தி ௰௪, ௰௫ ௰௧—௨௨.)

(iii) பொன்னணியாகிய காரியத்திற்குப் பொன்முதற் காரணம்; பொற்கொல்லன் நிமித்த காரணம்; அவனுக்குத் துணையாயுள்ள கருவிகள்

79/2

துணைக்காரணம்—இங்ஙனம் காரியந்தோறும் காரணம் மூன்றுள. இவ்வாறே, உலகத்திற்கு முதற் காரணம் மாயை; (சிறந்த) நிமித்தகாரணம் கடவுள்; துணைக்காரணம அக்கடவுளது வல்லமையாகிய சத்தி என உணர்தல் மெய்யுணர்வாம்; வேறு வகையாகப் பிறழ உணரும் உணர்வு ஆபாசஞானமேயாம் (உந்தி உரு—ருo.)

(iv) முதற்பொருளாகிய சிவம் தானே அறியும் சித்துப்பொருள் (அறிவுடைப்பொருள்); உயிர் அறிவிக்க அறியும் சித்துப்பொருள்; மாயையும் மாயாகாரியமும் அறிவில்லாத சடப்பொருள் ஆகலின், சிவம் முதற்காரணமாக, அதினின்று உயிர் தோன்றும் என்ருவது, மாயையும் மாயாகாரியமுந் தோன்றும் என்ருவது கூறுதல் பொருத்தமன்று: அன்றியும் ஒழுங்கும் பிறழா நிகழ்ச்சியும் உடையதாய், யாவர்க்கும் ஒருபடித்தாய் உளதென்று அறியப்படும உலகை இலதென்று பேசும் பேச்சு உண்மை குறித்ததன்று: வேதம் உலக சிருட்டிக் கிரமம் முதலிய கூறலின், அதற்கு உலகை உள் பொருளெனக்கோடலே கருத்தாம். ஆகலின் "பதி பசு பாசம்"எனப்பகர் மூன்றிற்—பதியினைப் போற்பசு பாசம் அநாதி" என்றருளிச்செய்த திருமூலர் முதலாயினர் அறிவுறுத்தஞானமே ஞானம்; அல்லாதார் உரைப்பன சோம்பேறிஞானம். (உந்தி ருo—ருசு.)

(v) "அத்வைதம்" என வேதத்தின் எழுந்த சொல்லின் பொருள் பிரிப்பின்றிநிற்றல் (அநந்யம்) என்பதே; அதனை ஏகம் என்னும் சொல்லின் பிரதிபதமாகக்கொள்ளுதல் திருவருள் பெருத மூகர் செயலேயாம் (உந்திருஎ—ருஅ.)

(vi) உடலின்கண் தோன்றும் அறிவு உடலின் தன்மையாகலின், அஃது உடலழியின் உடனழியும் என்னும் நாத்திகவாதந் தவறே: அறிவு உடல் வளர்ச்சிக்குச்சார்பாய் உடலைப்பற்றியுள்ள நித்தியப் பொருள்: ஆயினும் சிற்றறிவாகலின், பேருணர் வுடைய முதற்பொருளாகாது: உயிர்க்கு உடம்பின் வழிவரும் இன்பத்துன்பங்கள் அதனால் செய்யப்படும் நல்வினை தீவினைக்கு ஈடாய் முதல்வனால் தரப்பட்டு வருவன (உந்தி சஉ—சஅ.)

(vii) "அகம்பிரமம்" என்னும் மாயாவாதிகள், பிரமத்தில் உலகந்தோன்றும் என்றலின், சத்தில் அசத்துத் தோன்றும் என்றாராயிற்று: இனி, நாத்திகர், பூதகாரியமாகிய உடம்பின்குணமே உயிர் என்றலின், அசத்தில் சத்துத்தோன்றும் என்று ராயிற்று: இவ்விருவரும் முப்பொருள் உண்மை கொள்ளாது, முறையே பிரமம் ஒன்றே உளதென வும், உலகம் ஒன்றேயுளதெனவும் சொல்லி, ஏனைய வற்றை மறுத்தலின் ஒருபொருட் கொள்கையினரே. ஆகலின், இவர்கள் அண்ணன் தம்பி எனவே கொள்ளற்பாலர். (உந்தி சசு—ருக).

(viii) சிவபிரானுக்குப் பிறப்பிறப்பு யாண்டும் எவ்வகையானும் பேசப்படாமையானும், அவரை வழிபடாதவர் ஒருவரும் இல்லையாகலானும் அவர் ஒருவரே உயிர்கட்கு நாயகராகிய பசுபதி; ஏனைய ரெல்லோரும் உயிர்களென்பது வேதப்பொருள் விளக்கும் புராணங்களான் உணரலாகும். (உந்தி ருச—சுஉ.)

(ix) திருநீறுங் கண்டிகையும் வைதிக சின்னங் களாம்; அவற்றை விதிப்படி அணிதல் வேண்டும்

வேதத்தில் உள்ள விதிகளை அநுட்டிக்குமாறு விளக்குவன சிவாகமங்களேயாகலின், அவை வேத பாடியம் என்று உணரப்படும்: அங்ஙனம் உணர்ந்து ஒழுகாமை அவைதிகமாம் (உந்தி ௬௧—அ௩)

(x) காயத்திரி மந்திரத்திலுள்ள "பர்கஸ்" என்னும் சொற்பொருளாகிய 'ஒளி' 'சிவசத்தி'யே யாம். ஓங்காரவாச்சியன் சிவபிரானே. அவனே எழுத்துக்களின் அகரம்போல யாண்டும் நிறைந் துள்ள இறைவன். (உந்தி அ௪—அஎ.)

(xi) சிவபூசை செய்வார்க்கே பிறப்பு அறும்; திருமால், பிரமன் முதலாயினோரும் சிவபூசையுடை யவரே. (உந்தி அஅ—௯௨.) என்பவும் பிறவுமாம்.

இத்துணை விழுப்பொருள்களை எளிய இனிய நடையில் தெளிய உணர்த்தி இன்புறுத்தும் இந் நூல் யாவராலும் மனப்பாடம் செய்தற்கு உரிய தாகலின், இது மூன்றும் பதிப்பாக நமது மெய்கண் டார் கழகத்தின் சார்பில் வெளிவருகின்றது. திரு வருள் விழைவோர் யாவரும் ஓதி உணர்ந்து பயன் கொள்ளுமாறு ஆல்நிழலமர்ந்த அவிர்சடைக் கடவுள் அருள்புரிக!

வாழ்க சிவநெறி! வாழ்க தமிழ்மொழி!!

மார்கழி ௧௪, எ௨எ,
காஞ்சிபுரம்.

இங்ஙனம்,
க. வச்சிரவேல் முதலியார்.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்
மெய்கண்டநாதன் விரைகழல் வெல்க

பதிப்புரை

பொய்ய னைத்தையும் விட்டவர் புந்தியுள்
மெய்ய னைச்சுடர் வெண்மழு வேந்திய
கைய னைக்கச்சி ஏகம்பம் மேவிய
ஐய னைத்தொழு வார்க்கில்லை அல்லலே.

திருச்சிற்றம்பலம்.

சித்தாந்தசைவச் செந்நெறியை மக்கள் எளிய முறையிற்பயின்று இன்புறவேண்டுமென்ற நல்ல உள்ளத்தால், சென்னை, ஸ்ரீ வைதிக சைவ சித்தாந்த சண்டமாருதம் உயர்திரு சோமசுந்தர நாயகரவர்கள் "சித்தாந்த உந்தியார்" எனப் பெயரிய இவ்வருமை நூலை இயற்றியிருக்கின்றனர். இந்நூலை முதற்பதிப்பாக, பல்லவபுரத் தன்பர்களும் இரண்டாம் பதிப்பாக, 15—2—1881-ல் திரிசிரபுரம் சைவ சமாசத்தாரும் பதிப்பித்திருக்கின்றனர். இந்நூல் இப்போது கிடைப்பதரிதாக இருத்தலால் கழகச் சார்பில் அச்சிட்டு வெளியிடப் பெறுகின்றது.

இந்நூலின் முழுவதினுமுள்ள அரிய கருத்துக்களை எளிய முறையில் யாவரும் அறிந்தின்புறும் வகை சிறந்த முன்னுரை, தலைப்புக்களை அன்புடனளித்துதவிய நமது கழக ஆசிரியர், சித்தாந்த சிகாமணி திரு க. வச்சிரவேல் முதலியார் B A., L. T., அவர்களுக்கும் இதனை அச்சிடுவதற்கான பொருளை மனமுவந்தளித்த கொத்தமங்கலம், சித்தாந்தசைவச் செல்வர் உயர்திரு. தெ. பழ. சித. சதாசிவச் செட்டியாரவர்களுக்கும் எனது அன்பார்ந்த நன்றி உரித்தாகுக.

இந்நூல் இனிதுமுடிந்து வெளிவர இன்னருள் புரிந்ததிருவேகம்பநாதன் திருவடிகளை இறைஞ்சுகிறேன்

காஞ்சிபுரம்,
விரோதி தை கஉ

திரு. வி. திருஞானசம்பந்தன்,
செயலாளன், மெய்கண்டார் கழகம்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சித்தாந்தவுந்தியார்.

கடவுள் வாழ்த்து.

கல்லால் நிழன்மலை வில்லா ரருளிய
பொல்லா ரிணைமல ருந்தீபற
போற்றித் துதிப்பாமென் றுந்தீபற. (க)

கந்தன் திருத்தணி காசல மேவிய
சுந்தரன் பாலடைந் துந்தீபற
சுகம்பெறு வாழுவந் துந்தீபற. (உ)

அம்பலத் தாடு மழக னடிமலர்
கும்பிடப் பெற்றுமென் றுந்தீபற
கூற்றைக் கடந்தாமென் றுந்தீபற. (ங)

தேவி யுமையுல கீன்றபி ராட்டிநம்
ஆவி யெனும்படி யுந்தீபற
அகலா அருள்வியந் துந்தீபற. (ச)

ஞானசம் பந்த னடிமலர்ப் பத்தியஞ்
ஞானம கற்றுமென் றுந்தீபற
நம்பெரு வாழ்வர்மென் றுந்தீபற. (ரு)

நால்வர் வாழ்த்து

நாவர செம்மை நயந்தரு ளாரிய
ராவரென் றேமகிழ்ந் துந்தீபற
அவரடிக் கன்புசெய் துந்தீபற. (௬)

வன்றொண்டர் பாதம் வழுத்து மடியார்தம்
பின்றொண்டு செய்வாமென் றுந்தீபற
பெற்றும் பெருமையென் றுந்தீபற. (௭)

மாணிக்க வாசக னார்மலர்ப் பாதநம்
மாணிப்பொன் னாகுமென் றுந்தீபற
அருள்வழி காட்டுமென் றுந்தீபற. (௮)

நாயன்மார் வாழ்த்து

அறுபத்து மூவ ரடிமலர் வாழ்த்திடிற்
பெறுமுத்தி வேறிலை யுந்தீபற
பேறது வாகுமென் றுந்தீபற. (௯)

சந்தானகுரவர் வாழ்த்து

மெய்கண்டான் சந்ததி மேவினர்க் கேயிவண்
உய்வுண்டா மென்றுணர்ந் துந்தீபற
உண்மை நிலயமென் றுந்தீபற. (௧௦)

அருணந்தி யார்பத மன்புசெய் தேத்திநம்
இருணந்தி மாயுமென் றுந்தீபற
எங்குரு நாதரென் றுந்தீபற. (௧௧)

மறைஞான சம்பந்தர் மாணடி வாழ்த்துனர்க்
கிறைஞான மெய்துமென் றுந்தீபற
எல்லா முணர்ந்தாரென் றுந்தீபற. (கஉ)

போற்றும் **உமாபதிப் புங்கவர்** போதமிங்
கேற்றுஞ் சிவனிடத் துந்தீபற
எல்லா வுயிரையு முந்தீபற. (கங)

சித்தாந்தஞான முதலாசிரியன் வாழ்த்து

சீகண்ட தேசிகன் சேவடிக் கன்புசெய்
தேகண்ட வாழ்விதென் றுந்தீபற
என்றுநா னில்லையென் றுந்தீபற. (கச)

சித்தாந்த ஞானத்தின் இன்றியமையாமை

நானில்லை யென்னு நயங்கண் டறியார்மற்
றானில்லை யேபெற்றிங் குந்தீபற
உழல்வரெந் நாளுமென் றுந்தீபற. (கரு)

நூற் பெயர்

சித்தாந்த ஞானந் தெளிய வுணர்த்தலாற்
சித்தாந்த வுந்தியென் றுந்தீபற
செப்புமிந் நூற்பெய ருந்தீபற. (கசா)

"சித்தாந்தம்" என்னும் சொற்பொருட்காரணம்

எல்லா மதங்களும் பூருவ மாகையால்
சொல்வார்சித் தாந்தமென் றுந்தீபற
சொற்பொருள் தேர்ந்தாரென் றுந்தீபற. (கஎ)

வழிபடுதெய்வ வணக்கம்

காழியில் வந்தருள் கண்மணி யாகுநம்
வாழ்வருள் பெற்றேமென் றுந்தீபற
வரவுபோக் கற்றுமென் றுந்தீபற. (கஅ)

வேதாந்தப்பயன் சித்தாந்தமெனல்

வேதாந்த ஞான விழுப்பொருள் கற்றவர்
நாதாந்தங் கண்டாரென் றுந்தீபற
நாமவர்க் காட்பட்டோ முந்தீபற. (கக)

சித்தாந்த ஞானஞ் சிவோகம்பா விக்கவே
சித்தாந்தஞ் செய்யுமென் றுந்தீபற
சிவமேநா மானேமென் றுந்தீபற. (உ0)

வேதாந்த சித்தாந்த வேற்றுமை காண்பவர்
பேதாந்தப் பேயரென் றுந்தீபற
பெரியோர் துணிபிதென் றுந்தீபற. (உக)

எல்லாஞ் சிவமென் றியம்பும்வே தத்துண்மை
கல்லார் கயவரென் றுந்தீபற
கற்பர்வே ளுகவே யுந்தீபற. (உஉ)

மூவகைக் காரணம்

காரணம் பொன்னதிற் காரியம் பூடணம்
ஆரணங் கூறுமென் றுந்தீபற
அநுபூதி யாகுமென் றுந்தீபற. (உங)

காரண மூவகை பொன்முதற் காரணம்
பூரணன் சொல்வகை யுந்தீபற
புகல்வா மிரண்டுவே றுந்தீபற. (௨௪)

கம்மிய னோடு கருவி நிமித்தமுஞ்
செம்மைத் துணையுமென் றுந்தீபற
சேரும் பரிசிதென் றுந்தீபற. (௨௫)

இம்முறை யன்றி யியம்புவர் பித்தர்வே
றம்முறை கேளாமென் றுந்தீபற
ஆபாச ஞானமென் றுந்தீபற. (௨௬)

உலகின் முதற்காரணம் மாயை

நிமித்தகாரணம் சிவமுதல் துணைக்காரணம் சிவசத்தி

மாயை முதற்பரன் மாணு நிமித்தமிங்
காயுந் துணைசத்தி யுந்தீபற
ஆகு முலகமென் றுந்தீபற. (௨௭)

கம்மிய னோடு கருவிபொன் மூன்றுமொன்
றெம்முறை கொள்வதென் றுந்தீபற
எம்மத மேற்குமீ துந்தீபற. (௨௮)

கம்மிய னகான் கருவியும் பொன்னுமற்
றிம்முறை யாகாவென் றுந்தீபற
இரண்டு மொருமுத லுந்தீபற. (௨௯)

கம்மியன் பாற்பொன்னை யன்றியோர் பூடணம்
செம்மை கொளாமைதேர்ந் துந்திபற
சிவன்செயல் போற்றுவா முந்திபற. (கூ0)

பிரம முதற்காரண வாதமறுப்பு

சிவனுயர் சித்திவன் றன்னி லுலகசித்
தேவனுதி யாகிற்கு முந்திபற
ஏற்குமா மாயையி லுந்திபற. (கூக)

சிவனுயி ராகா னிவன்சிவ னாகான்மற்
றிவராவ தெப்படி யுந்திபற
இல்லா வுலகமென் றுந்திபற. (கூஉ)

உலகமில் லாத நிலைமை விகாரத்தால்
நிலவு மதிசய முந்திபற
நீகண் டுணர்தியென் றுந்திபற. (கூகூ)

சூனிய முதற்காரண வாதமறுப்பு

இல்லா வுலகமில் லாமைகொண் டெய்துமென்
றுல்லாசம் பேசுவ ருந்திபற
ஊகமில் லாமைதேர்ந் துந்திபற. (கூச)

இல்லா வொருபொரு ளுண்டென வேதமென்
சொல்லாகிற் குமதி யுந்திபற
சோம்பேறி ஞானமென் றுந்திபற. (கூரு)

பதி பசு பாசமூன்றும் அநாதி நித்தியப் பொருள்கள்

பாசம் பசுபதி யாகுமிம் மூன்றுநாம்
பேசி லநாதியென் றுந்தீபற
பெரியோர்சொல் வார்பய னுந்தீபற. (௩௬)

அத்துவித இயல்பு

ஏகமென் பார்சில ரத்துவி தப்பொருள்
மூகரற் றாரரு ளுந்தீபற
முற்றும் விரோதமென் றுந்தீபற. (௩எ)

ஒன்றற் றிரண்டற் றுபயமு மற்றதற்
றென்றுதல் கூர்ந்துண ருந்தீபற
உயரத்து விதமென் றுந்தீபற. (௩அ)

வழிபடுதெய்வ வணக்கம்

மாலுக் கரன்வடி வந்தரு தேசிகன்
காலுக் கபயமென் றுந்தீபற
கலிநசை தீர்ந்தோமென் றுந்தீபற. (௩௯)

சித்தாந்த சாத்திரங்கள்

உந்திசங் கற்ப முயர்போத மாதிகள்
சிந்தித் துணர்வாமென் றுந்தீபற
சித்தாந்த நூல்களென் றுந்தீபற (௪0)

பதிஞான நூல்க ளிவையன்றி வேறுதுர்க்
கதிஞான நூல்களென் றுந்தீபற
கட்டற விட்டோமென் றுந்தீபற. (௪௧)

நாத்திகவாத மறுப்பு

நாத்திகம் பேசி நலிந்துழன் மூடரைப்
பார்த்தலுந் தோடமென் றுந்தீபற
பழக்கங் கொடியதென் றுந்தீபற. (சஉ)

தேகஞ் சடமதிற் சேர்குண முஞ்சட
மாகும தாலுயி ருந்தீபற
அக்குண மாகாதென் றுந்தீபற. (சந)

சித்துயி ராகுந் தெளிவுடை யார்க்கது
சத்தா மொருமுத லுந்தீபற
தலைவனு மாகாதென் றுந்தீபற. (சச)

தலைவ னிவற்றில்வே றாகி யிரண்டையும்
அலைவறச் செய்வானென் றுந்தீபற
அவ்வப் பரிசறிந் துந்தீபற. (சரு)

பூதஞ் சடமாத லாலதன் காரிய
பேதங்கள் தோன்றாவென் றுந்தீபற
பெரியோன் சிவனன்றி யுந்தீபற. (சசு)

செய்பவ ரின்றியோர் செய்வினை யின்றெனுந்
தெய்வ வுரைதெளிந் துந்தீபற
சிவனருள் சேருமென் றுந்தீபற. (சஎ)

நாத்திகரும் அகம் பிரமவாதிகளும் பங்காளிகள் எனல்

சத்தில் அசத்தும் அசத்தினிற் சத்துமிங்
கெத்திறந் தோன்றுமென் றுந்தீபற
இயம்புவ தேலாதென் றுந்தீபற. (சஅ)

சத்தில் அசத்துரை செய்வா ரகம்பிர
மத்தருன் மத்தரென் றுந்தீபற
வஞ்சகப் பித்தரென் றுந்தீபற. (சகூ)

ஓதும்அசத்தி லுயர்சத் துதிக்குமென்
றோதுவர் நாத்திக ருந்தீபற
ஊக மிழந்தாரென் றுந்தீபற. (ருo)

நாத்திகப் புல்லருண் ணுணி நலம்பெற
மாத்திரை யொன்றினு ளுந்தீபற
வகுத்தனம் போதமென் றுந்தீபற. (ருக)

வழிபடு தெய்வ வணக்கம்

சைவ சிகாமணி சம்பந்த தேசிகன்
உய்வழி காட்டின னுந்தீபற
ஒப்பில் கருணையென் றுந்தீபற. (ருஉ)

சிவபிரானே முதல்வனெனல்

காரண னாதி பசுக்களை மேய்ப்பவன்
நாரண னாகுமென் றுந்தீபற
கருதற் கினியானென் றுந்தீபற. (ருஙு)

வேதத்தி லப்பசுக் கூட்டத்தை யாள்பதி
மாதுக் குகந்தானென் றுந்தீபற
வந்தித் துரைக்குமென் றுந்தீபற. (ருச)

உயிர்களைத் தெய்வமெனக்கொண்டு வழிபடுதல் இழுக்கெனல்

பாசத்தின் மூழ்கும் பசுக்களைத் தெய்வமென்
றேசெத் தொழிவரென் றுந்திபற
எப்படி உய்வரென் றுந்திபற. (ருரு)

பிருந்தை இறந்த மயலெய்தி ரோதனம்
புரிந்தவன் தேவென்ப துந்திபற
பொருந்துவ தெப்படி யுந்திபற. (ருசு)

சிவபிரான் முதன்மையை அவன்றன் அணிகளாலும் புராணத்தாலும் நிறுவுதல்

சிங்க வுரியையும் மாலய னென்பையும்
மங்கை பங்காளனன் றுந்திபற
வாங்கித் தரித்தானென் றுந்திபற. (ருஎ)

கரியவன் செந்நீர் கபாலத்திற் கொண்டுநம்
பெரியவன் தோன்றுத லுந்திபற
பேசித் துதிப்பாமென் றுந்திபற. (ருஅ)

பொய்த்தேவு பேசிப் புலம்பு மவலர்தம்
பற்றேதும் வேண்டாமென் றுந்திபற
பற்றிடிற் பாவமென் றுந்திபற. (ருகு)

மாயவன் தேவெனின் மாதேவன் பக்கல்சார்ந்
தாயதன் கண்ணிடந் துந்திபற
அர்ச்சித்த தென்கொலென் றுந்திபற. (சுo)

கண்ணிடந் தர்ச்சித்த காரணத் தாலவன்
கண்ணனெனும்பெய ருந்தீபற
கண்டன னாகுமென் றுந்தீபற. (சூக)

அன்பிற் சிறக்கு மவனுக் கரனன்று
தன்பக்க லாழிதந் துந்தீபற
தானருள் செய்தானென் றுந்தீபற. (சூஉ)

மாலய னாதி பசுக்கள் கடவுளர்
போலிருப் பாரவ ருந்தீபற
போற்றும் பதியாகா ருந்தீபற. (சூங)

வியாச சூத்திரபாடியங்களுள் ஸ்ரீ கண்டர் பாடியமே
பொருந்தும் உரையெனல்.

வியாத னுரைத்த மிகுசூத்தி ரப்பொருள்
பேதம் படப்பல ருந்தீபற
பேசினர் வேறுவே றுந்தீபற. (சூச)

சங்கரர் ஆநந்ததீர்த்தர் உடையவர்
தங்க ளுரைநமக் குந்தீபற
சழக்குரை யாகுமென் றுந்தீபற. (சூரு)

சீகண்ட தேசிகர் நன்கருள் செய்யுரை
யேகண் டுணர்வாமென் றுந்தீபற
ஏத்துமா பாடிய முந்தீபற (சூசா)

வழிபடு தெய்வ வணக்கம்

ஆச்சா புரத்தி லனந்த முயிர்க்கன்று
பேச்சோ டுளந்தவி ருந்தீபற
பேரின்பம் வந்ததென் றுந்தீபற. (கூஎ)

இன்பந் தரவல்ல ஈசன் திருஞான
சம்பந்த நாதனென் றுந்தீபற
தன்னிக ரில்லானென் றுந்தீபற. (கூஅ)

சிவசின்னங்களின் பெருமையும் அணியுமாறும்

நீறு புனைந்து நிமல னடிக்கன்பு
மீறு மவர்தமக் குந்தீபற
மேல்விடு வந்ததென் றுந்தீபற. (கூகூ)

பூதியி லாமதி கேடர் முகாலோப
ஞதிக ளாகாவென் றுந்தீபற
அஞ்சுவர் மேலோரென் றுந்தீபற. (எ௦)

கண்டிகை பூண்டு கவின்செயு மன்பர்க்குத்
தொண்டுசெய் வாமுவந் துந்தீபற
சுருதிக் கிசையவென் றுந்தீபற. (எக)

வேதத்திற் கண்டிகை பூதியல்லால் வேறு
போதிப்ப தில்லையென் றுந்தீபற
போற்றுவர் மேலோரென் றுந்தீபற. (எஉ)

ஞானங்க மாவது பூதியென் றேமறை
தானுங் குணர்த்துமென் றுந்தீபற
சம்பந்தர் தந்ததென் றுந்தீபற. (எங)

எம்பந்தம் நீங்க எழுந்தருள் காரணர்
சம்பந்த நாதரென் றுந்தீபற
சமயத் தலைவரென் றுந்தீபற. (எச)

அன்னவர் பூதி அணிவதற் காகமஞ்
சொன்ன முறைதெரிந் துந்தீபற
சொல்லி விரித்தாரென் றுந்தீபற. (எரு)

வேதிய ரென்னும் பெயர்மாத் திரம்பெற்று
நீதி முறைதப்பி யுந்தீபற
நீறிடு வார்சில ருந்தீபற. (எசு)

உலக்கையிற் பூணென் றொளிரு மவர்கரத்
திலக்கமில் ரேகைக ளுந்தீபற
இடத்தெரி யாமணி றுந்தீபற. (எஎ)

சைவாகமப் பிராமாணியம்

ஆகமத் தன்றி அணியும் விதிநீறு
யோகிகள் காணரென் றுந்தீபற
ஊகித் தறிவாமென் றுந்தீபற. (எஅ)

ஆகமங் கைவிட்ட பாதகர் வேதத்தைப்
போகவிட் டார்மறந் துந்தீபற
பொய்வேடக் காரரென் றுந்தீபற. (எகூ)

வேதம் பசுவதன் பாலுய ராகமம்
ஆத லறிந்தில ருந்தீபற
அஞ்ஞான பந்தரென் றுந்தீபற. (அ0)

ஆகமம் வேண்டாத பாவிகள் கோயிலிற்
போகலொட் டோமினி யுந்தீபற
புகல்வாம் விதியெடுத் துந்தீபற. (அக)

அங்குலங் கண்டணி யும்விதி யாகமம்
அங்கப் படியுரைத் துந்தீபற
அருளு மறிவாமென் றுந்தீபற. (அஉ)

வேதிய னவான் விபூதியைப் போற்றானேல்
சாதிப் பறையனென் றுந்தீபற
சாதித் துரைப்பாமென் றுந்தீபற. (அ௩)

சிவபிரானே காயத்திரிக்கு உரிப்பொருள்

பர்க்க பதத்தொளி யாவான் சிவனெனுந்
தர்க்க மிசைப்பாமென் றுந்தீபற
சாத்திரங் காட்டியென் றுந்தீபற. (அச)

காயத் திரிப்பொருள் கண்ணுத லென்கைநன்
காயத் தெரியுமென் றுந்தீபற
அருமறை கூறுமென் றுந்தீபற. (அரு)

சிவபிரான் பிரணவ வாச்சியர்

அகரத் துயர்பொரு ளங்கண ரென்றுநாம்
பகரத் துணிந்தாமென் றுந்தீபற
பழமறை சொற்படி யுந்தீபற (அசு)

ஓதும் பிரணவத் துட்பொருள் மாதுமை
காதல னுகுமென் றுந்தீபற
கங்கைம ணாளனென் றுந்தீபற (அஎ)

சிவபூசையின் இன்றியமையாமை

சிவலிங்க பூசைசெய் தன்றி யொருவரும்
பவமிங்கு மாயாரென் றுந்தீபற
பத்தி நெறிவதிந் துந்தீபற. (அஅ)

பூசையில் லார்மல போசனஞ் செய்வரென்
றேசுமன் றேமறை யுந்தீபற
இயற்றுவர் மேலோரென் றுந்தீபற. (அகூ)

இந்திரன் செய்பூசை நீலலிங் கத்திலென்
றுந்தி யுரைப்பாமென் றுந்தீபற
உரைமறை யென்றுண ருந்தீபற. (கூ0

பங்கயன் பூசை படிகலிங் கத்திலென்
றிங்கிசைப் பாமுனர்ந் துந்திபற
இயம்பு மெசுர்மறை யுந்திபற. (கூக)

மாலவன் பூசை மரகத லிங்கத்திற்
சாலுமீ துண்மையென் றுந்திபற
சதுர்மறை கூறுமென் றுந்திபற. (கூஉ

சிவசின்னமல்லாதன அவைதிகமும் சாபப்பயனும் எனல்

மண்குழைத் திட்டார் மறையிழந் திட்டாரென்
றெண்குணத் தாமெமக் குந்திபற
எண்குணம் வாய்க்குமென் றுந்திபற. (கூங)

சூடுண்ட தேகந் தொடிற்படிந் தேகங்கை
யாடுவர் மேலோரென் றுந்திபற
அப்பவ நீங்கவென் றுந்திபற. (கூச)

கௌதம ரிட்டபெ ருஞ்சாபத் தின்வலிக்
கௌடத மில்லையென் றுந்திபற
அழிவரந் தோபவத் துந்திபற. (கூரு)

சிவனடிப்பத்தியே உயிர்க்கு உறுதி

ஏகம்பம் பேணி இருந்தவர் ஆணவ
மோகம் பரித்தாரென் றுந்திபற
முத்திகை கூடுமென் றுந்திபற. (கூசு)

.த்திச் சிவனருள் பெற்றத னைமக்
.ற்ற பெரும்பய னுந்தீபற
.ரைப்பரி தாமுணர்ந் துந்தீபற. (கஎ)

.ன்னவன் பொன்னடிக் கன்புசெ லுத்தினங்
.ன்மங் கழலுமென் றுந்தீபற
.ற்பித மற்றுமென் றுந்தீபற. (கஅ)

பாசவிடுதின் சிவப்பேறு எய்தும் எனல்

.ற்பிதம் யாவுங் கழலக்கா லாலுனை
.ற்புத னேகதி யுந்தீபற
ஆவனென் றேமகிழ்ந் துந்தீபற (கக)

மகாவாக்கிய பாவனையால் வாசனுமலங் கழலும்

ஒருமொழி சொன்ன வுளவறி வார்தம்
இருமையு மாயுமென் றுந்தீபற
என்றும் பெரியரென் றுந்தீபற. (௩)

திருவள்ளுவர் முதலிய செந்தமிழாசிரியர் வாழ்த்து

செய்தற் கரியன செய்வார் பெரியரென்
.ய்தற் குரைத்தாரென் றுந்தீபற
.ப்பில்பே ராளரென் றுந்தீபற. (௩க)

அத்திரு வாக்கை அநுதினஞ் சிந்திப்பார்
முத்திக் குரியரென் றுந்தீபற
மும்முதல் கண்டாரென் றுந்தீபற. (௩உ)

பற்றுக பற்றற்றா னென்னும் பழமொழிப்
பற்றொன்று மேபோது முந்தீபற
பறக்கு மவித்தையென் றுந்தீபற. (

வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை யென்
வாண்டகைக் கன்புசெய் துந்தீபற [
அற்றாம் பவவினை யுந்தீபற. (

திருவிசைப் பாவிசைத் தார்முத னம்மவர்
தருமருள் பெற்றாமென் றுந்தீபற
தன்னிய ரானோமென் றுந்தீபற. (

கண்ணன் முடிமிசைக் கால்வைத்த தேசிக
எண்ணுமெந் தெய்வமென் றுந்தீபற
இன்னருள் செய்தாரென் றுந்தீபற. (

தொண்டர்பு ராணந் துகளறச் செய்தவர்
தொண்டர்தந் தொண்டுசெய் துந்தீபற
தொல்வினை தீர்ப்பாமென் றுந்தீபற. (

ஆரியர் நால்வர் பதமலர் வாழி நல்
லாரியம் வாழியென் றுந்தீபற
அருந்தமிழ் வாழியென் றுந்தீபற. (

சித்தாந்தவுந்தியார் முற்றும்.

திருச்சிற்றம்பலம்.

—(★)—

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

மெய்கண்ட நாதன் விரைகழல் வெல்க



காஞ்சிபுரம்

மெய்கண்டார் கழக வெளியீடுகள்

1 திருமுறை சாத்திரங்கள்
2 தலைமை உரையின்மேல்குறிப்பு
3 திருஞானசம்பந்தர் திருநாட் சிறப்பு
4 காஞ்சிப்புராணம்
5 திருத்தொண்டர் திருநட்சத்திரம்
6 ஆண்டுவிழாத் தலைமைப்பேருரை
7 மெய்கண்டார் திருவுருவப்படம்
8 திருக்குரங்கணின்முட்டத் தேவாரம்
9 திருவோத்தூர்த் தேவாரம்
0 திருமாகறல் தேவாரம்
1 திருப்பள்ளியெழுச்சி திருவெம்பாவை
2 சைவசந்தானாசாரியர் புராணம்

13 திருப்பனங்காட்டூர்த் தேவாரம்
14 பாராயணத் திருமுறைத்திரட்டு
15 திருநெறிக்காரைக்காட்டுத் தேவாரம்
16 சிவஞானபோதம்
17 கச்சியேகம்பர் ஆனந்தக்களிப்பு
18 திருக்கச்சிமேற்றளித் தேவாரம்
19 திருவோணகாந்தன்றளித் தேவாரம்
20 திருமாற்பேற்றுத் தேவாரம்
21 திருத்திலதைப்பதித் தேவாரம்
22 சேக்கிழார் தோத்திரத்திரட்டு
23 வரசித்திவிநாயகர் பதிகம்
24 திருக்கச்சூர் திருவிடைச்சுரத் தேவாரம்
25 திருக்கழுக்குன்றத் தேவாரம்
26 திருக்கச்சியனேகதங்காவதத் தேவாரம்
27 திருப்பாசூர், திருவெண்பாக்கத் தேவாரம்
28 திருக்காளத்தித் தேவாரம்
29 பாராயணச் சிவஞானபோதம்
30 ஏகாம்பரநாதர் தோத்திரம்
31 திருநீற்றுப் பதிகம்
32 திருமண நூல்
33 திருவூறல் தக்கோலம் தேவாரம்
34 கூவம், இலம்பையங்கோட்டூர்த் தேவாரம்
35 உண்மைநெறி விளக்க ஆராய்ச்சியுரை
36 திருவாலங்காட்டுத் தேவாரம்
37 சிவநெறிவளர்ச்சி
38 திருவல்லத் தேவாரம்
39 திருவாசிலி, திருஇரும்பைமாகாளத் தேவாரம்
40 திருவக்கரைத் தேவாரம்
41 சித்தாந்தவுந்தியார்.

சைவமும் தமிழும் தழைத்தினி தோங்குக.

பத்மா பிரஸ், காஞ்சிபுரம்.